TAMIL NADU LEGISLATIVE LIBRARY
4-DEC1979
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1979 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஓய்வுபெற்ற மதுரா கோட்ஸ் மில் தொழிலாளர்கள்.

*குறுகிய கால வினா எண் 8—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரா கோட்ஸ் மில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் வாரிசுதாரர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று 1968-ல் நடந்த முத்தரப்பு கமிட்டி (தொழில் துறை செயலர் திரு. எம். எம். இராஜேந்திரன் அவர்கள் தலைமையில்) ஒப்பந்தப்படி நிர்வாகத்தினர் சுமார் 350 ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் வாரிசுதாரர்களை சேர்க்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதன்மூலம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ) : மதுரா கோட்ஸ் நிர்வாகம் ஒப்பந்தத்தை மீறினதாக மதுரா கோட்ஸ் ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் மன்றத்திடமிருந்து முறையீடு வந்ததும் இதுகுறித்து மதுரை தொழிலாளர் நலத் துறை துணை ஆணையர் விசாரித்தார். தொழிற் தகராறு சட்டத்தின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இவ்வொப்பந்தம் . மீறப்பட்டது பற்றிய குறிப்பிட்ட சம்பவங்களை எடுத்துக்கூறுமாறு மன்றத்திற்கு அறிவுரை வழங்கியும் இதுகாறும் இதுகுறித்து தொழில் தகராறு ஏதும் எழுப்பப்படவில்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, மதுரை கோட்ஸ் தொழிற்சாலையில் வாரிசு அடிப்படையில் ஓய்வுபெற்ற தொழிலாளர்களுடைய வாரிசுகளை வேலைக்கு

எடுக்க வேண்டுமென்று அன்றைய தொழிற்துறை செயலாளராக இருந்த திரு. எம்.எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ் அவர்கள் அரசு சார்பாகவும், தொழிலாளர், முதலாளிகள் பிரதிநிதிகளைக் கொண்டு முக்கூட்டு ஒப்பந்தம்—வாரிசுதாரர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று—இருந்தும், அதற்குப் பின்னால் அதை மறுக்கிற அளவுக்கு தனக்கு வேண்டிய தொழிலாளர் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு ஏறக்குறைய 350 பேர் ரிடையர் ஆகியும், அவர்களுடைய வாரிசுகளை வேலையில் எடுத்துக் கொள்ளாமல் அன்றாடம் உண்ணாவிரதம் இருப்பதும் ஊர் வலம் போவதுமாக இருக்கிற நிலையில், நிர்வாகத்திற்கு பல முறை எங்களைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்லியும் இது வரையில் செயல்படுத்தாத நிலையிலிருக்கிறார்கள். (மணியடிக் கப்பெற்றது) அவர்கள் ஓய்வுபெற்றவர்கள். ஆகவே, அரசே அனாதை இல்லங்களில் அனாதைகளை எடுத்து வளர்ப்பதைப் போல, அரசே இப்பிரச்னையில் நேரடியாக தலையிட்டு, ஒரு நியாயத்தை வழங்குவதற்கு முன்வருமா என்ற விவரம் தெரிவதற்காகத்தான் நான் இதைக் கேட்டேன். ஆகவே, அருள்கூர்ந்து அரசினுடைய நிலையை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவரவர்களே, முதல் ஒப்பந்தம் 9—7—1971-லே ஏற்பட்டது. இதன் காலவரம்பு 31—12—1975-லே முடிவுற்றது. இரண்டாவது ஒப்பந்தம் 23—12—1976-லே ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது உள்ள நிலை ஒப்பந்தத்தை மீறியதாகக் கூறி தமிழ் நாடு பார்வேர்ட் பிளாக் யூனியன் நிர்வாகத்தின் மீது மதுரை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது. தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இப்பொருள் தற் போது வழக்குமன்ற வரம்புக்குட்பட்டதாகத் தெரிகிறது.

<u>திரு. கே. கந்தசாமி :</u> தலைவரவர்களே, பார்வேர்டு பிளாக் யூனியன் என்ற பெயரில் ஒரு சிலர் அவ்வாறு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், அதை ஒரு தனிப்பட்ட யூனியன் தொடர்ந்திருந்தாலும் கூட அதை நிறுத்தி வைத்து, அவர்களையும் கேஸை வாபஸ் வாங்க வைக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே, ஓய்வுபெற்றவர்கள் என்ற முறையில் மனிதாபிமானத்தோடு நியாயத்தை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> பேரவைத் தலைவரவர்களே, நான் முன்னதாகவே பதில் கொடுத்தவாறு நாங்கள் கேட்டிருக்கும் தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் அங்குள்ள டி.சி.எல். அவர்களுக்குக் கொடுத்தால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒப்பந்தத்தை மீறி வருவதாக அரசாங்கத்திற்குத் தொடர்ந்து புகார் வந்திருக்கிறதா ? ஒப்பந்தத்தை மீறிய அந்த நிர்வாகத்தின் மீது அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒப்பந்தத்தை மீறியிருக்கிறது என்று சொன்னால் புகார் மனு அரசிற்கு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தத்தை மீறி இருக்கிறார்களா என்று பரிசீலனை செய்து, அதில் ஒப்பந்தத்தை மீறியிருக்கிறார்கள் என்று அரசு கருதினால் தொழில் தகராறு சட்டம் 29-ன் கீழ் யார் குற்றம் செய்திருந்தாலும், முதலாளி, தொழிலாளி யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வ.மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை, ஓய்வுபெற்றவர்களுடைய வாரிசுக்கு வேலை கொடுக்கின்ற பிரச்னை. ஓய்வுபெற்றவர்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேறியவர்கள். அப்படியிருக்கும்போது நிர்வாகம் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, அரசே முன்வந்து இதனை நிறைவேற்ற வேண்டும். ஏற்கனவே ஓய்வுபெற்றவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்கக்கூடாது என்ற முறையிலே, அங்குள்ள சங்கத்தினரே புறக்கணிக்கிறார்கள். தங்களுடைய சுயநலத்தின் காரணமாக, ஓய்வுபெற்றவர்களுடைய பிள்ளைகளை மறுபடியும் அனுமதித்தால், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்க முடியாது என்ற நிலையிருப்பதால், அவர்கள் எதிர்க்கிறார்கள், ஆகவே, ஓய்வுபெற்றவர்களுக்காக அரசே தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, சமரச அதிகாரிகள்—கன்சிலியேஷன் ஆபீஸர்ஸ்—என்பவர்களே அரசு அதிகாரிகள்தான். அவர்களிடம் இந்தப் புகார் சென்றிருக்கிறது. அவர்கள் சில தகவல்கள் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்தால் மேல் நடவடிக்கை அவர்கள் எடுப்பார்கள்.

Gas Turbine Power Stations

*Q. No. 278—THIRU N, KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether the Government propose to set up Gas Turbine Power Stations in this State; and

(b) if so, the details thereof?